**செய்தி வெளியீடு எண்: 72** **நாள்: 23.1.2010**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

## செய்தி வெளியீடு

சிகரெட் மற்றும் புகையிலை பொருட்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விளம்பரம் செய்வது **சிகரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் தடைச் சட்டம்–2003** பிரிவு-5ன்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

சென்னை நகரில் பல இடங்களில் "போர் ஸ்கொயர் கெட் பேமஸ் (Four Square Get Famous), தமிழ்நாட்டின் அடுத்த இசைப்புயல் நீங்களா"? என்ற விளம்பரம் பல கடைகளில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான நுழைவுச்சீட்டுகள், போர் ஸ்கொயர் சிகரெட் நிறுவனத்தினரால் இளைஞர்களுக்கு வழங்கப்படுகிறது என்று பொதுமக்களிடமிருந்து மாநில புகையிலை கட்டுப்பாட்டு மையத்திற்கு தகவல் பெறப்பட்டது. அதன் அடிப்படையில் மாநில புகையிலை கட்டுப்பாட்டு அலுவலர்களால் சென்னையில் பல்வேறு இடங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வில் கடந்த 09.01.2010 மற்றும் 10.01.2010 ஆகிய தேதிகளில் சென்னை கோடாம்பாக்கம் பத்மராம் மகால், தியாகராயநகர் விஜய மகால் ஆகிய இடங்களில் இந்த இசை நிகழ்ச்சி நடைபெற்றதாக தெரியவந்துள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியில் பிரபல திரைப்பட இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி, பாடகர் கார்த்திக், பாடகி சுசித்ரா ஆகியோர் கலந்துகொண்டதாகவும் தெரியவந்துள்ளது. இது போன்ற நிகழ்ச்சிகள் வருகிற 23.01.2010 மற்றும் 24.01.2010 ஆகிய தேதிகளிலும் நடைபெற இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதில் பாடகி மாதங்கி, பாடகர் ரஞ்சித் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

சிகரெட் மற்றும் இதர புகையிலை பொருட்கள் தடைச் சட்டம்–2003 பிரிவு-5ன் கீழ் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக் குழு, இந்நிகழ்ச்சியை 23.01.2010 மற்றும் 24.01.2010 ஆகிய தேதிகளில் ஏற்பாடு செய்துள்ள **"காட் பிரே பிலிப்ஸ் இந்தியா"** நிறுவனத்திற்கு இந்த இசை நிகழ்ச்சிகளை நிறுத்தக் கோரி சட்டப்பூர்வமான அறிவிப்புக் கடிதம் அளித்துள்ளது.

இக்குழு, அனைத்து மாநகர காவல் நிலையங்களுக்கும் தகவல் தெரிவித்து, இசை நிகழ்ச்சிகளை நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சென்னை மாநகர காவல் ஆணையாளரை கேட்டுக் கொண்டுள்ளது.

09.01.2010 மற்றும் 10.01.2010 ஆகிய தேதிகளில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட இசையமைப்பாளர் மற்றும் பாடகர்களுக்கும், 23.01.2010 மற்றும் 24.01.2010 ஆகிய நாட்களில் நடைபெற உள்ள இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ள இசையமைப்பாளர் மற்றும் பாடகர்களுக்கும் சட்டப்பூர்வ அறிவிப்புக் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கைகளையும் மீறி மேற்படி "**காட் பிரே பிலிப்ஸ் இந்தியா**" நிறுவனம் நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தினால் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசு முதன்மைச் செயலாளர்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**